3.09.2024.

O.S.No. 6/2021

**திரு/திருமதி. விஜயலலிதா Pw1**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை .**

இவ்வழக்கை என் மாமனாருக்கு சொந்தமான சொத்தில் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்கரையில் கண்ட சங்கதிகளை மறுத்து நான் முதல்விசாரதணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் பெயர் சிவராஜ். என் மாமனார் 27.12.2016ல் இறந்தார். அந்த இறப்பு சான்றை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லைஅதை பிரதிவாதிகள் பெட்டியில் இருந்ததை எடுத்துக்கொண்டார்களா. பிரதிவாதி சீனிவாசன் என் மாமனாருக்கு மூத்த மகன் என்றால் சரிதான். எம்.கே.மணி என்ற என் கணவர் அவரது இளைய மகன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சீனிவாசன் எப்போது பிறந்தார் என்று தெரியாது. என் மாமனார் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கினார். 2வது அயிட்ட சொத்தை 2ம பிரதிவாதி சீனிவாசன் தன் வருமானத்தை கொண்டு தன் தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் நினைவில்லை. என் கணவர் மணி 18.12.1962 ல் பிறந்தார். அவரது பிறந்தநாள் 17.12.1962 என்று சொன்னால் நாங்கள் அவரது பிறந்தநாளை 18.12.1962அனறு கொண்டாடுவோம். 4ம் வாதி சாந்தி என் கணவரின் தங்கை. அவர் எனக்கு நாத்தனார். 4ம் வாதி சாந்திக்கு பிரதிவாதிதான் திருமணம் செய்துவைத்தார் என்றால் இல்லை. 4ம் வாதி சாந்திக்கு 1986ல் திருமணம் நடைபெற்றது. நாங்கள் என் மாமனார் உயிருடன் இருக்கும்வரை கூட்டுக்குடும்பமாக இருந்தோம். 1991 முதல் பிரிந்து நானும் என் கணவரும் தனிக்குடித்தினம் வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. எனக்கு 1 ஆண் மகன் 1 பெண் மகள். வா.சா.ஆ.3ன்படி சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கப்பட்டது என்றால் சரிதான் அக்கடனை பிரதிவாதி கட்டி அடமானத்தை மீட்டார் என்றால் சரியல்ல. அந்த வீட்டை கட்டி 70 வருடங்கள் இருக்கும். மேற்படி ஓட்டு வீட்டை யார் பராமரித்து பழுதுபார்பார்கள் என்றால் என் மாமனார்தான் பராமரித்து பழுதுபார்பார். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை பத்தி 10ல் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் என் வழக்கறிஞர் படித்து காட்டினார் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் பராமரிப்பு செலவுகளை பிரதிவாதி செய்ததாக என் வழக்கறிஞர் படித்து சொன்னார். தாவா சொத்திற்க்கான வீட்டு வரி குடிநீர் கட்டண வரி ஆகியவற்றை யார் கட்டினார்கள் என்றால் 8ஏக்கு நானும் 8சிக்கு பிரதிவாதி கட்டுகிறார். அவ்வாறு குடிநீர் கட்டணம் மற்றும் வீட்டுவரி ரசீதுகளை நான இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. என் மாமனார் இறக்கும்வரை நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்தோம். பிரதிவாதி தறி தொழில் செய்கிறார். பிரதிவாதி பத்தி 6ல் கூறியிருப்பதை மறுத்துள்ளேனா என்றால் அதை படித்து காட்டினால் என்னால் சொல்ல முடியும். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா அல்லது என் மாமனார் வருமானத்தில் வாங்கியதா என்றால் ஒரு பிளாட்

மட்டும் என் மாமனார் வருமானத்தில் வாங்கியது மற்ற சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாகும். நான் குறிப்பிடுவதைபோல நான் எந்த வரி வகையறாவும் செலுத்தவில்லை என்றும் பிரதிவாதிதான் செலுத்தியுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல என் மாமனார் இறந்தபிறகு அவர் அவற்றை எடுத்துக்கொண்டார். தாவா 2வது அயிட்ட சொத்தை நான் கோரும் பாகப்பிரிவினை கிடைக்கதக்கதில்லை என்றும் அச்சொத்தை பிரதிவாதி என் மாமனார் பெயரில் தன் சொந்த வருமானத்திலிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கபடுகிறது)